முன்னேற்றக் கழக அரசு கண்டு கொள்ளவில்லை" என்று சொல்லி, பிறகு அவர்கள் கூறுகிறார்கள். "இதைப் பற்றி பாப்பா உமாநாத் கூறியதுடன், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைத்து, வெற்றி பெற்ற மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் பாப்பா உமாநாத் சட்டசபையில் இப்போது பேசி, தி.மு.க. வினர் செயல்களையும், போலீசாரின் நிறமையின்மையையும் அம்பலப் படுத்தியிருக்கிறார்கள்" என்று கூறியுள்ளார்கள். நான் பேசிய பேச்சு அவ்வாறல்ல என்பதை அவை அறியும். அதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். எனவே இது சபையினுடைய உரிமையை மீறக்கூடிய பிரச்சினை என்பது மட்டுமல்ல இந்தப் பத்திரிகையினுடைய நிறுவனராகவும், பிரசுரகர்த்தாவாகவும் இந்த அவையின் எதிர்க் கட்சித் தலைவர் இருக்கிறார் என்பதால், இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக பேரவைத் தலைவர் விடை சொன்ன பிறகுதான் தாங்கள் எழுப்ப வேண்டும். இது குறித்துப் பத்திரிகை ஆசிரியருக்கு எழுதி, விளக்கம் கேட்டு, பின் என்னுடைய தீர்ப்பை அறிவிக்கிறேன்.

2. தகவல் கோரல்.

(அ) மின் கட்டண பாக்கிக்காக மின் துண்டிப்பு செய்வதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயம் சம்பந்தப்பட்ட முக்கியமானதொரு விஷயம் சம்பந்தமாக மாண்புமிகு மின்சாரத் துறையினுடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வந்து, இந்த அவையிலே அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறேன். கடந்த காலத்தினுடைய மின்சார பாக்கி சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். 5 குதிரை சக்தியுள்ள மோட்டார்களை வைக்காமலேயே, அக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்தவர்களிடமிருந்து 3 குதிரைச் சக்தி மோட்டாருக்குரிய பணம்தான் வசூலிக்கப்பட்டு வந்தது. இப்போது 5 குதிரைச் சக்திக்குரிய பணம் கட்ட வேண்டுமென்று காரணம் சொல்லி, பல இடங்களில் மின் இணைப்புத் துண்டிப்பு நடந்து கொண்டு வருகிறது. மிகவும்

1989 பிப்ரவரி 20] [திரு. சோ. அழகர்சாமி]

கஷ்டமான நிலையிலே இருக்கிற விவசாயிகள் அரைகுறைத் தண்ணீரைக்கூட, வரக்கூடிய மின்சாரத்தைக் கொண்டு உப யோகிக்க முடியாமல் ஒரு நெருக்கடி இருக்கிறது. எனவே மின் துண்டிப்பை உடன் நிறுத்தி, அது குறித்துப் பரிசீலனை செய்யப் படுமா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சரவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை இப்போதுதான் அரசி னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். தக்க அவ காசம் எடுத்துக்கொண்டு உகந்தரிய, தொடர்புடைய அமைச்சர வர்கள் பதில் அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள், இங்கே கூறிய அந்தக் குறைபாடு குறித்து விளக்கமாக அரசுக்கு எழுதி அனுப்புவார்களேயானால், ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள ஏது வாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர் களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இதை விளக்கமாக எழுதி அனுப்புமாறு முதலமைச்சரவர்கள் சொன்ன தால், அதை விளக்கமாக எழுதி அனுப்பினால் தக்கவாறு அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது துண்டிக்கப்படுகிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து அது குறித்து எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவரவர் களே, இதைப் பற்றி முறையாக இதுவரை யாரும் தெரிவிக்க வில்லை. அண்ணன் அவர்கள் முறையாகத் தெரிவிப்பார்களா னால் அதிகாரிகளிடம் தக்க பதிலை வாங்கி, சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து 'மாண்புமிகு உறுப்பினர் என்ற சொற்றொடரைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.